# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**<u>ஆணை நாள்.10.06.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்கள்.NC 1386,1369,1368/B/2023</u>**

திரு.நாஞ்சில் C. மனோகரன் ... மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர்,
கோட்டப்பொறியாளர்
(நெடுஞ்சாலைத்துறை),
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
தாம்பரம் உட்கோட்டம்,
சென்னை-600045. ... பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் 12.02.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது:-

*"இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள், மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகத்திற்கு நேரில் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுக்களில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பான ஆவணங்களை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும் பட்சத்தில் மனுதாரரிடமிருந்து முதல் 25 பக்கங்களுக்கு கட்டணமின்றியும், 25 பக்கங்களுக்கு மிகைப்படும் ஆவணங்களுக்குரிய கட்டணத்தை செலுத்தக் கோரி, அவரால் கோரப்படும் ஆவணங்களை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, மனுதாரருக்கு வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ மற்றும் புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக தயார் செய்து, பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர் (நெ) க(ம)ப, தாம்பரம் உட்கோட்டம், சென்னை அவர்கள் <u>02.06.2026</u> அன்று இவ்வாணையத்திற்கு நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது."*

மேற்படி உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர் (நெ), க(ம)ப., தாம்பரம் உட்கோட்டம், சென்னை அவர்கள் ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி அறிக்கையினை சமர்ப்பிக்கவில்லை என்பதை இவ்வாணையம் பதிவு செய்து,

பொது தகவல் அலுவலர் மீது காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice) கோரப்படுகின்றது.

மேற்படி இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பாணையின்மீது பொது தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் விளக்கம் சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், பொது தகவல் அலுவலரிடமிருந்து விளக்கங்கள் ஏதும் பெறப்படவில்லை என தீர்மானித்து தக்க நடவடிக்கை பரிந்துரை செய்யப்படுமென உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**இணைப்பு: காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice)**

**<u>வழக்கு எண்கள்.NC 1386,1369,1368/B/2023</u>**

## பெறுநர்

1. பொது தகவல் அலுவலர்,
   கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை),
   கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
   தாம்பரம் உட்கோட்டம்,
   சென்னை-600045.

2. மேல்முறையீட்டாளர்,
   திரு.நாஞ்சில் C. மனோகரன்,
   எண்.11, சாந்தி நகர் முதல் குறுக்குத் தெரு,
   கௌரிவாக்கம்,
   சென்னை-600073.
   செல்.9789934044.

Copy to: File. GP PC
100626

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590


**வழக்கு எண்கள். NC 1386,1369,1368/B/2023**

## காரணம் கேட்கும் குறிப்பாணை

## (Show Cause Notice)

திரு.நாஞ்சில் C. மனோகரன் அவர்கள் தாக்கல் செய்திருந்த மேல்முறையீடு / புகார் / ஆணை நிறைவேற்றப்படாமை மனு எண்.NC **1386,1369,1368/B/2023**-இல் இவ்வாணையம் பிறப்பித்த உத்தரவின்படி **சம்மந்தப்பட்ட** பொதுத் தகவல் அலுவலர் / **கோட்டப்பொறியாளர்(நெ), க(ம)ப, தாம்பரம் உட்கோட்டம், சென்னை** என்ற தாங்கள் பொதுத் தகவல் அலுவலர் என்ற முறையில், தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு **20(1)** மற்றும் **20(2)**-இன் கீழ் நடவடிக்கைக்கு உட்பட்டவர் என ஆணையம் கருதுவதாலும்,

சட்டப்பிரிவு **20(1)** மற்றும் **20(2)**-இன் கீழ், தங்களுக்கான பணி விதிகளின்படி நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யவும் ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாலும்,

தாங்கள், தங்களின் மீது மேற்படியான பிரிவுகளின் கீழ் ஏன் நடவடிக்கை தொடர பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை அதற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை 30.06.2026 அன்றை தேதிக்குள் ஆணையத்திற்கு பதிவு அஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும்.

(த.பி.பா)

குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் விளக்கம் வரப்பெறவில்லை எனில், தாங்கள் விளக்கம் அளிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி, ஆவணங்களில் உள்ள விவரங்களின் அடிப்படையில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**/ ஆணையத்தின் ஆணைப்படி /**

**உதவிப்பதிவாளர்**

## பெறுநர்

பொது தகவல் அலுவலர்,

கோட்டப்பொறியாளர் (நெ), க(ம)ப,

தாம்பரம் உட்கோட்டம்,

சென்னை-600045.

<u>குறிப்பு:</u>

தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவுகள் **20(1)** மற்றும் **20(2)**-இன்படி ஒரு பொதுத் தகவல் அலுவலரை கீழ்க்கண்ட நிகழ்வுகளில் நடவடிக்கைக்கு உட்படுத்தலாம்:

- தகவல் கோரும் விண்ணப்பத்தை பெற மறுத்தல்
- தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு **7(1)**-இன்படி குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் தகவல் தராதது
- தகவல் கோரும் வேண்டுகோளை தீய நோக்கத்துடன் மறுத்தல்
- தெரிந்தே தவறான, முழுமையற்ற அல்லது திசை திருப்பும் வகையிலான தகவலை அளித்தல்
- வேண்டுகோளுக்கு உட்பட்ட தகவல்களை அழித்தல்
- தகவல் தருவதை எவ்வகையிலேனும் தடுத்தல்